

நவீன இந்தியாவின் நாட்டுப்பற்று மிக்க மகானாகிய சுவாமி விவேகானந்தர் (1863-1902) தமது வாழ்க்கையாலும் வாக்கினாலும் இந்திய இளைஞர்களை விழித்தெழச் செய்தவர். இந்திய அரசு அவரது பிறந்த நாளான ஜனவரி 12-ஆம் தேதியை தேசிய இளைஞர் தினமாக அறிவித்துள்ளது.

Swami Vivekananda (1863-1902), the Patriot-saint of modern India, aroused the youth of India by his life and message. His birthday, the 12th of January, is declared as the National Youth Day by the Government of India.



1863 ஜனவரி 12-ஆம் நாள் நரேந்திரர் (சுவாமி விவேகானந்தர்) கொல்கத்தாவில் பிறந்தார். அவர் அஞ்சா நெஞ்சம் கொண்டவர்; பிறவித் தலைவர்; விளையாட்டு, இசை, கல்வி, எல்லாவற்றிலும் வல்லவர்; தியானத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் ஏழைகளிடம் பரிவும் கொண்டவராக வளர்ந்து வந்தார்.

Narendra (later Swami Vivekananda) was born in Kolkata on the 12th of January 1863. He was a courageous boy and a born leader excelling in games, music and studies. He grew up with a strong inclination for meditation and a deep sympathy for the poor.



நண்பர்களுடன் ஏறி விளையாடிக் கொண்டிருந்த மரத்தில் பூதம் இருப்பதாகக் கிழவர் ஒருவர் பயமுறுத்திய போது நரேன் தம் நண்பர்களிடம், "பயப்படாதீர்கள். பூதம் இருந்தால் அது முன்பே தொந்தரவு செய்திருக்குமல்லவா?" என்றார்.

பிற்காலத்தில் அவர், "புத்தகங்களில் படித்ததைக் கொண்டோ, மற்றொருவர் கூறுவதைக் கேட்டோ, எதையும் நம்பி விடாதீர்கள். உண்மையை நீங்களாகவே அறிந்து கொள்ளுங்கள். அது தான் மெய்யுணர்வாகும்" என்றார்.

When an old man tried to frighten Narendra and his friends saying that there was a ghost in the tree, he told them not to believe such threats because if really true, it would have troubled them long back. Later he said: "Do not believe a thing because you have read of it in books or another said it is so! Find out the truth for yourself! That is realization."



இளைஞரான அவர் வாழ்க்கையின் பொருளை அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். எவரேனும் கடவுளைக் கண்டதுண்டா என அறிந்துகொள்ள விரும்பினார்.

தட்சிணேஸ்வரத்தில் (கொல்கத்தா) வாழ்ந்த ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் (1836-1886) ஒருவரே, "ஆம் நான் கடவுளைக் கண்டிருக்கிறேன். யார் கடவுளுக்காக ஏங்கித் தவிப்பார்களோ, அவர்களும் அவரைக் காண இயலும்" என்று கூறினார். நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தம் குருவாக ஏற்றார்.

As a young man deeply interested in the meaning of life, Narendra wondered if any one had seen God. Only Sri Ramakrishna Paramahamsa (1836-86) of Dakshineswar (Kolkata) could tell him that he had seen God and anyone who sincerely seeks God can see Him. Narendra accepted Sri Ramakrishna as his Guru.